[2001 செப்டம்பர் 3

1996—2001 போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இலாப—நட்டக் கணக்கு@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 109–ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றி 1-9-2001 அன்று தாம் தெரிவித்த கருத்துகளை வெவ்வேறு பொருள்படும்படி செய்தித்தாள்கள் வெளியிட்டதால் தன்னிலை விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 109–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1–9–2001 அன்று காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு பேசினார். நான் தமிழகத்தில் முதலமைச்சராக இருக்கின்ற நிலையில் முதலமைச்சராகிய என்னைப்பற்றி ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்போது அதிலே நீதி கிடைக்காது என்றும், அதனால் அந்த வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டுமென்றும் இந்திய அரசு தலைமை வழக்குரைஞர்–Attorney-General–உச்ச நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளது குறித்து நான் பெரிதும் வருத்தப்படுவதாகக் கூறி இந்த மாநில நீதிபதிகள் எல்லாம் நேர்மை இல்லாதவர்களா என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் எழுப்பினார். அதற்கு எதிர்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஆட்சேபம் தெரிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து நான் இந்த மன்றத்தில் கூறிய கருத்துகளைப் பற்றி பல்வேறு செய்தித்தாள்கள் வெவ்வெறு வகையில் பொருள்படும்படியாக தவறான செய்திகளை வெளியிட்டுள்ளன.

@ 549, 550 ஆகிய பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2001 செப்டம்பர் 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அதுகுறித்து சட்டமன்ற விதி 109–ன்கீழ் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

நான் முதலமைச்சராக இருப்பதால் இங்கே சென்னை உயர் நீதிமன்றத்தில் டான்சி வழக்கு நடக்கக்கூடாது என்று தி.மு.க.வினர் கூறுகிறார்கள். காரணம் என்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அதனால் சாதகமான தீர்ப்பைப் பெற்றுவிடுவேன் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். அந்தச் சமயத்தில் ஏற்கெனவே தமிழ்நாட்டில் நடைபெற்ற நிலக்கரி இறக்குமதி செய்ததில் ஊழல் நடந்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குபற்றி நான் குறிப்பிட்டேன். தனி நீதிமன்றம் அந்த வழக்கில் என்னை விடுவித்திருந்தாலும், உயர் நீதிமன்றமும் தனி நீதிமன்றத்தின் தீர்ப்பு சரிதான் என்று உறுதி செய்திருந்தாலும், அன்றைய தி.மு.க. அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து, உச்ச நீதிமன்றத்தில் தனி நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அளித்த தீர்ப்பு இரத்து செய்யப்பட்டு, அந்த வழக்கில் மீண்டும் விசாரணை நடைபெற வேண்டுமென்ற உத்தரவு வந்தது. அப்படியானால் தி.மு.க. மத்திய கூட்டணி அரசில் அங்கம் வகிப்பதால் மத்திய அரசின் செல்வாக்கைப் பயன்படுத்தித்தான் அந்த உத்தரவைப் பெற்றார்கள் என யாரேனும் கருதமாட்டார்களா என்பது குறித்து தி.மு.க.வினர்தான் விளக்கம் அளிக்க வேண்டும் எனும் பொருள்படக் கூறியிருந்தேன். நான் முதலமைச்சராக இருக்கின்ற நிலையில் உயர் நீதிமன்றத்தில் நீதி கிடைக்காது என்று வாதாடுகிறவர்கள் மேற்கண்ட நிலக்கரி வழக்கில் செல்வாக்கைப் பயன்படுத்தித்தான் ஆணை பெறப்பட்டது என்று யாரேனும் கூறினால், அதை ஏற்றுக்கொள்வார்களா என்ற பொருள்படும்படிதான் நான் கூறினேன். நான் வேறு எந்த மாறுபட்ட கருத்தையும் நீதிமன்றத்தை அவமதிக்கும் பொருளில் எதையும் கூறவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு விஷயத்தை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய தீர்ப்பு வந்தபோதிலும்கூட நான் நீதிபதிகளைப்பற்றி எந்தக் கருத்தும் சொல்லவில்லை. எந்த நீதிமன்றத்தைப்பற்றியும் நான் குறை கூறி கருத்து தெரிவிக்கவில்லை. ஒவ்வொரு நீதிபதியையும் நான் மதிக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியைக்கூட நான் நாடாளுமன்ற வேட்பாளராக நிறுத்தி இருந்தேன். எனவே உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு எந்த உள்நோக்கமும் கற்பித்து எதையும் நான் இந்த மன்றத்தில் கூறவில்லை என்பதை தன்னிலை விளக்கமாக நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.